


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், புத்தாக்க அறிவியல் கண்காட்சி (INSPIRE) நாகர்கோவில், ஹோம் சர்ச் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் இன்று (22.07.2016) நடைபெற்றது. மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 468/2016 நாள்: 22.07.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில், ஹோம் சர்ச் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் புத்தாக்க அறிவியல் கண்காட்சியினை (INSPIRE) இன்று (22.07.2016) திறந்து வைத்தார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பள்ளிக் கல்வித்துறையின் மூலம், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு விதமான ஊக்கத்தொகைகள், உதவித்தொகைகள், கல்வி உபகாரணங்கள் வழங்கி வருகிறார்கள். மேலும் பள்ளி மாணவ, மாணவியர்களிடையே உள்ள அறிவியல் திறமைகளை வெளிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், புத்தாக்க அறிவியல் கண்காட்சி (INSPIRE) நாகர்கோவில், ஹோம் சர்ச் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் இன்று (22.07.2016) நடைபெற்றது. கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், குத்துவிளக்கேற்றி, திறந்து வைத்து, தலைமையுரையில் பேசும்போது தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பள்ளி மாணவ, மாணவியர்களின் எதிர்காலம் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக, பல்வேறு விதமான கல்வி உபகாரணங்களை வழங்கி வருகிறார்கள். மேலும் அனைத்து மாவட்டங்களில் உள்ள அரசு பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவ, மாணவியர்களின் தேர்ச்சி சதவீதம் அதிகபடுத்துவதற்காக, சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுவதோடு, அவர்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்கிட ஆசிரியர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பள்ளிக்கல்விதுறை மூலம் மாணவ, மாணவியர்களின் திறமைகளை வெளிப்படுத்த பல்வேறு விதமான போட்டிகள் நடத்தியும், சிறந்த படைப்புகளை தேர்வு செய்து, பரிசுகள் வழங்கி, ஊக்கப்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தினால் அறிவியலில் சிறந்து விளங்கும் 6 முதல் 10 வரை பயிலும் மாணவ, மாணவியர்களை தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு புத்தாக்க அறிவியல் ஆய்வு விருது (INSPIRE AWARD) வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 2015-2016 கல்வி ஆண்டில் அந்தந்த தலைமையாசிரியர் மூலம் அறிவியல் பாடத்தில் சிறந்து விளங்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளி மாணவர்கள் 129 பேரும், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 110 பேரும், அரசு உதவி பெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் 75 பேரும், மெட்ரிக் பள்ளி மாணவர்கள் 21 பேரும் என மொத்தம் 335 மாணவ, மாணவியர்களை தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களது வங்கி கணக்கில் ரூ.5 ஆயிரம் செலுத்தப்பட்டுள்ளது.

இதில் சிறந்த படைப்புகளை உருவாக்கிய 25 மாணவ, மாணவியர்களை, மூன்று பொறியியல் கல்லூரியை சார்ந்த ஆசிரியர்களும், மூன்று கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சாாந்த ஆசியர்களும், மூன்று பள்ளிகளை சார்ந்த ஆசிரியர்கள் என மொத்தம் ஒன்பது தேர்வாளர்கள் மூலம், தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களை மாநில அளவிலான நடைபெறும் கண்காட்சியில் கலந்து கொள்வார்கள்.

எனவே மாணவ, மாணவியர்கள் பொது மக்களுக்கு மிகவும் பயனுள்ளதான படைப்புகளை உருவாக்குவதோடு, மற்ற பள்ளிகளில் உருவாக்கிய படைப்புகளையும், நீங்கள் பார்த்து, அதிலிருக்கும் அறிவியல் கற்றுக்கொள்ள வேண்டும். இதுபோன்ற வெவ்வேறு படைப்புகளை மாணவர்கள் செய்து வந்தால், கற்கும் திறன் நிச்சயமாக வளர்ச்சியடையும். மேலும் நீங்கள் இன்று நடைபெறும் கண்காட்சியில் தேர்ச்சி பெறாவிட்டாலும், தொடர் முயற்சி மேற்கொண்டு வந்தால், வெற்றி நிச்சயம். இவர்கள் வாழ்வில் வெற்றிபெற, ஆசிரியர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த, மணல் சுத்திகரிப்பு மற்றும் சாலை வாகனம் மூலம் மின்சாரம் தயாரித்தல், உணவு மற்றும் விவசாயம், மருந்தில்லா மருத்துவம், கழிவுநீர் மேலாண்மை, தொலைதொடர்பு சாதனங்கள் போன்ற படைப்புகளை பார்வையிட்டு, அதன் செயல்பாட்டுகளை கேட்டறிந்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ. ஜெயக்குமார், மெட்டரிக் பள்ளி ஆய்வாளர் திருமதி. செ. பாலா, உதவி திட்ட அலுவலர் (அனைவருக்கும் கல்விய இயக்கம்) திரு. சு. வில்வம், மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு. எஸ். ஜாண் பெர்க்மான்ஸ், திரு. பி. ஜாண் விஜயன், ஹோம் சர்ச் மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியை திருமதி. ஜா. ஜான்ஸி லதா, ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.